முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
O.S.No.720/2019

Witness PW 1

பெயர்: தேவி

த/பெ.: குமார்

இன்று (04/07/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.
சத்தியமாக சொல்கிறேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தானசெட்டில்மென்ட் படி தாவா சொத்தில் எங்களுக்கு பாத்தியம் என்று வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்ள என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல செய்துள்ளேன் என்றால் 15 சென்டுக்கு வழக்கு தாக்கல ் செய்துள்ளேன். எனது தந்தையார் எனக்கு தானமாக கொடுத்தது எவ்வளவு விஸ்தீரணம் என்று சொல்கிறேன் என்றால் 15 சென்டுதான். என் தந்தையார் எனக்கு 12 சென்டுதான் தானமாக கொடுத்தார் நான் தவறுதலாக 15 சென்ட் என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே 167/3டி -க்கு தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் நான்குபுற எல்லை காட்டி எழுதியுள்ளாரா என்றால் எழுதியுள்ளார். அவ்வாறு 4 புற எல்லை எழுதவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.4 முதல் 6 கிஸ்து ரசீதுகள் எந்த சர்வே எண்ணுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் 167/3டி. பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் எதிர் கோரிக்கை ஆகியவைகளை வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன் என்ன சொல்லியுள்ளார் ் என்றால் அவர் செய்யாதவைகளை எல்லாம் செய்ததாக சொல்லியுள்ளார். பிரதிவாதி எனது தந்தையார் மீது ஒரு குற்றவியல் வழக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் என்ன விவரம் சொல்லி கொடுக்கப்பட்டிருந்தது என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், அதில்எனது தந்தையார் வாங்கவில்லை என்றும் பிரதிவாதி வாங்கிய சொத்து என்றும் குறிப்பிட்டுள்ளார். எனது தந்தையாருக்கு பாகமாக வந்த 15 சென்ட் நிலத்தில் பிரதிவாதிக்கு சரியான 4 புற எல்லை காட்டி 2 சென்ட் நிலத்தை 21.4.1993ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த கிரையப் பத்திரத்தின் படி பிரதிவாதி குடிசை கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எனது பெற்றோர்கள் அவரை காலி செய்ய சொன்னார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு காலி செய்யவில்லை என்றால் செண்டுக்கு ரூ.2,00,000/- கொடுக்க வேண்டுமென்று எனது பெற்றோர்கள் சொன்னர்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதி எனது பெற்றோர் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் மீது வழக்கு விக்கிரவாண்டி நீதிமன்றத்தில் சிஎம்பி எண்.12/2019 என விசாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த விசாரணையில் பிரதிவாதி 2 சென்ட் கிரையம் வாங்கி அவருடைய நிலத்தில் அனுபவித்து வருவதாகவும், மீதி சொத்தில் என்து தந்தையார் அனுபவித ்து வருவதாகவும் கண்டறிந்து அந்த வழக்கு முடிக்கப்பட்டது என்றால் விசாரணை செய்து எனது தநதையார்மீது எந்திவதமான தப்பும் இல்லை என்றும் சிவில் வழக்கு கொடுக்கப்பட்டது, அதில் உரிமையியில்

நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அந்த வழக்கு முடிந்த பிறகு தான் இந்த வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல ் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாணப்பத்திரிக்கையில் என்ன விவரங்கள் உள்ளது என்று நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாணப் பத்திரிக்கையில் பத்தி 11ல் ஒருவேளை பிரதிவாதிக்கு 2 சென்ட் எழுதிக் கொடுத்த நிலத்தை போக மீதி 13 சென்டு நிலத்தை எனக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. எனக்கு எவ்வளவு சென்ட் நிலம் தானம் கொடுக்கப்பட்டதுஎ ன்று தெரிந்துகொள்ளாமல் நான் வழக்கிட்டுள்ளேன் என்றால் 15 சென்டு தான் கொடுத்தார். 1993ல் எனது தந்தையார் வழக்கு பிரதிவாதிக்கு 2 கிரையம் கொடுத்துவிட்டார், அதனால் அதற்கு சேர்த்து நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி கோரியவாறு 2 சென்ட் பிரதிவாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வழக்கு பற்றி முழு விவரம் தெரியாமல் வழக்கில் தாக்கல செய்துள்ள ஆவணங்கள் பற்றி முழு விவரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல எனது வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல.

x

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

Principal Subordinate Judge ,
Villupuram